சொல்லியிருப்பதால் அதற்கு ஏதும் தடை இப்போது இல்லை. தமிழக அரசு மேலும் விசைத் தறியை விஸ்தரிக்கக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடம் அனுமதி பெற்று தனியார்கள் விசைத் தறிகளை வைத்துக் கொள்ளலாம் என்று இப்போது புதிய ஜவுளிக் கொள்கை அடிப்படையிலே கொள்கை உருவாக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதற்கு ஏதாவது சீலிங் உண்டா? ஆண்டுக்கு இவ்வளவு ஒதுக்க வேண்டும் என்று அளவுகோல் (டார்கெட்) உண்டா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அதிகார பூர்வமாக சுமார் 1 இலட்சம் விசைத் தறிகளும், அதிகார பூர்வமில்லாத விசைத் தறிகள் 1 இலட்சமும் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதனால் இந்த விசைத் தறியையும் மாற்றி சாதாரண சிறு தொழில் போல், ஸ்மால் இண்டஸ்ட்ரி போல் கருதி மாநில அரசு இந்த விசைத் தறிகளை பதிவு செய்யவும், அதை கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறது.

திருவிடைமருதூரில் நூற்பாலை.

732 (*வினா எண். 8353)—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் ஒரு நூற்பாலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

பரிசுச் சீட்டிற்கு விற்பனை வரி.

733 (*வினா எண். 6205)—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரிசுச் சீட்டுகளுக்குப் போடப்பட்ட வரி மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

1986 மே 10]

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: பரிசுச் சீட்டு மீது விதிக்கப்பட்ட விற்பனை வரி மூலம், 1984–85 நிதியாண்டில் (ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரை) மொத்தம் ரூ. 84,32,983 வருமானமாக கிடைத்துள்ளது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மட்டுமே இந்த வரி விதிப்பு செய்துள்ளதால் பக்கத்திலே இருக்கின்ற கேரள மாநிலத்தில், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய வியாபாரிகள், சில்லரை விற்பனை நிலையங்கள், மொத்த விற்பனை நிலையங்கள், போன்றவற்றை கேரளாவிலே துவங்கிவிட்டனர். எனவே வரியை மேலும் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக 28–1–1984-ல் இதற்கு விற்பனை வரி முறை அமலுக்கு வந்தபோது இது 20 விழுக்காடு ஒருமுனை வரி என்று இருந்தது. 17–3–1986 முதல் 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இப்போது அண்டை மாநிலமான கர்நாடக மாநில அரசுகூட இந்த ஆண்டு 10 விழுக்காடு ஒரு முனை வரி விதித்து இருக்கிறது. கேரள அரசும் கூட பரிசுச் சீட்டுக்கு வரி விதிக்கிற கருத்துருவை ஆராய்ந்துவருகிறது.

அண்டை மாநிலமான ஆந்திராவில் இந்த வரியினை விதிக்கும்படி நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே நம்முடைய அண்டை மாநில பரிசுச் சீட்டுக்கள் மூலமாக வருகிற வரி ஏய்ப்பைத் தடுக்க இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. மேலும் தமிழகத்தினுடைய பரிசுச் சீட்டுகளுக்கு விதிக்கப்பட்ட வரியைக் குறைப்பதற்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தமிழ்நாடு பரிசுச் சீட்டில் போலிப் பரிசுச் சீட்டுகள் விற்கப்பட்டன என்று சொல்லி பலர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். இதன் காரணத்தால் அந்த விற்பனை குறைந்து வருமானம் சற்று குறைந்திருக்கின்றது என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி போடுகிற அதிகாரம்தான் வணிக வரித்துறைக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது நிதித்துறையைச் சார்ந்தது. எனவே தனிக்கேள்வி போட்டால் விவரம் கிடைக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வெளி மாநிலச் சீட்டுக்கள் எவ்வளவு விற்பனை ஆகின்றன? நம்முடைய மாநிலத்திலே இருந்து எவ்வளவு தொகை வெளியே போகின்றது? அதேபோல் நமது சீட்டுகள் வெளி மாநிலங்களில் எவ்வளவு விற்பனை ஆகின்றன என்ற கணக்கு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா.வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தமிழ்நாட்டுப் பரிசுச் சீட்டுக்கள் வெளி மாநிலங்களில் விற்பனை ஆகின்றன, எவ்வளவு வெளி மாநிலச் சீட்டுக்கள் இங்கே விற்பனை ஆகின்றன என்ற விவரம் இல்லை. ஆனால் தமிழ்நாடு பரிசுச் சீட்டின் மூலமாக 51 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் வருமானமும், வெளி மாநிலப் பரிசுச் சீட்டுக்களின் மூலமாக 32,60,058 ரூபாய் வருமானமும் தமிழக அரசுக்கு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு குதிரைப் பந்தயத்தை ஒழித்ததுபோல் வருகிற ஆண்டில் சாராயக் கடைகளை ஒழிக்க இருப்பது போல் இந்த பரிசுச் சீட்டுக்களை ஒழிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா, வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோழித் தீவனத்திற்கு வரிச் சலுகை

734—(*வினா எண். 8573)—திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழித் தீவனத்திற்கு 5 சத விகிதம் வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (அ) மற்றும் (ஆ) 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின்படி 17–3–1986 முதல்தான் கோழித் தீவனத்திற்கு 5 சதவிகிதத்திலிருந்து 2 சத விகிதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது. கோழித் தீவனத்திற்கு முழுவதும் வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.